# மழைகொட்டித் தீர்த்தாலும்.. மயில்வண்ணம் கரையாது! மன்னவனே..! உன்நினைவு மனம்விட்டு மறையாது!

**ஆ**கஸ்ட் 7
ஏந்தெழில் மிகுந்த
ஏழிசைத் தமிழைத்
திரையிலும் உரையிலும்
தித்திக்கத் தந்த
தேன்கடல் கலைஞர்தம்
பொன்னுடல் துறந்து
புகழுடல் பெற்ற நாள்
இன்று!

**மனமெல்லாம் ஓடிவரும்
மகரந்த நதியாக
மழைபோலச் சுரந்துவரும்
மாப்புலவர் மதியாக
பகுத்தறிவுப் பாசறையின்
பண்பாட்டு விதியாக
தண்டமிழ் நாட்டின்
தனிப்பெரும் பதியாக
தமிழர்க்கு வாய்த்த
தகைசான்ற நிதியாக**

**முத்திரை பதித்த
முத்தமிழ் அறிஞர்
சிந்தனை நிறுத்தி நம்
சிந்தையை வருத்தி
விடைகொண்டு சென்றநாள்!
விழியழுது வெந்தநாள்!**

கண்கள்தொடும் தூரத்தில்
காலமெல்லாம் இருந்தவர்
காதுமடல் ஓரத்தில்
கவிதைகளாய் வழிந்தவர்!

பொன்னுருக்கி வைத்ததுபோல்
புதுமைகளைச் சொரிந்தவர்
பூங்காற்றுத் தொட்டதுபோல்
புத்தின்பம் பொழிந்தவர்!

இளைத்தாலும் பசித்தாலும்
இயக்கத்தைச் சுமந்தவர்
இனத்தாலும் மொழியாலும்
ஏறுபோல் நடந்தவர்!

மடமையைக் கொளுத்துகிற
மகிமையாய் மலர்ந்தவர்
மந்திரச் சொற்களால்
மகத்துவம் புரிந்தவர்!

தீதுவரும் போதெல்லாம்
தீப்பந்தம் ஆனவர்
தேடிவரும் சூரியனாய்த்
தெருவெல்லாம் போனவர்!

அஞ்சுமுறை அரியணையை
அலங்காரம் செய்தவர்
அதிகாரம் இருந்தாலும்
அகங்காரம் இலாதவர்!

அண்ணாவைப் பெரியாரை
ஆயுதமாய்த் தாங்கியவர்
ஆகையினால் பகையதிர
அலட்சிமாய்த் தாக்கியவர்!

இமயத்தைக் கூட
இங்கிருந்தே தூக்கியவர்
இமய வரம்பனின்
வீரத்தின் பாக்கியவர்!

ஏறுகின்ற மேடையெல்லாம்
இலக்கியமாய் ஆக்கியவர்
இளைஞர்களை மனப்பாட
எந்திரமாய் ஊக்கியவர்!

சமூக நீதிக்குச்
சாசனங்கள் தீட்டியவர்
சமத்துவ புரங்களினால்
சாதிகளை வெருட்டியவர்!

சாலைகளைச் சோலைகளாய்ச்
சாத்தியப் படுத்தியவர்
ஆலைகளை உருவாக்கி
அரியபுகழ் உடுத்தியவர்!

மாநிலத்தைக் கடந்தும்
மதிவண்ணம் செலுத்தியவர்
மானக் கொதிப்புடைய
அரசாட்சி நடத்தியவர்..

தீரமிகு முதல்வராய்த்
திக்குகளின் புதல்வராய்



ஈரமிகு தலைவராய்
இணையற்ற தமிழராய்

ஆட்சிக் கட்டிலை
அழகுசெய்த பெருமகனார்
மாட்சிமையின் உச்சத்தில்
மகுடம் புனைந்தஎங்கள்
மனத்தலைவர் இனத்தலைவர்
கலைஞர் எனும் திருமகனார்
கண்மூடி நித்திரையில்
கரைந்தநாள்.. இன்று!

**உறைந்து கிடக்கும்
உள்ளத்தின் உள்ளே
நிறைந்து கிடக்கின்றன அவரின்
நினைவுப் பேரலைகள்!**

வானம் தராத வெளிச்சமாய்
வைகறை தராத குளிர்ச்சியாய்
அவரின்
எண்ணங்களும் வண்ணங்களும்
இறைந்து கிடக்கின்றன
இதயங்கள் தோறும்!

அவர் சமைத்துக் கொடுத்த
சமுதாயம்
அவர் அமைத்துக் கொடுத்த
ஆகாயம்
அவர் அள்ளிக் கொடுத்த
ஆதாயம்
அனைத்தும்...
கல்விக் கூடங்களாய்க்
காவிய மாடங்களாய்
வள்ளுவர் கோட்டங்களாய்
வாலறிவு படைக்கும்
வாசக சாலைகளாய்
நுண்ணறிவு புகட்டும்
நூதன நூலகங்களாய்
காலக் கறையானால்
தின்னவே முடியாத
திட்டங்களாய் சட்டங்களாய்க்
கொட்டிக் கிடக்கிறது
தமிழர்கள் வாழ்வியலில்!

'துரோகத்தை முதன்முதலில்
சந்தித்தபோது.. புண்பட்டேன்
துரோகம் தொடர்ந்தபோது
பண்பட்டேன்' என்னும்
அனுபவ மொழிகளில்
அரசியல் உணர்த்திய
அசாத்திய மனிதர் அவர்!

**'பலர் தி.மு.க.வைப்
பகைக்கிறார்களே
ஏன்?' என்று
நிருபர் ஒருவர்
நெருடலாய்க் கேட்டபோது..
சிவந்தபடி சொன்னார்
செந்தமிழ்க் கலைஞர்:
'குரங்குகளுக்குக் குறள்படிக்கவா
தெரியும்!
கிழித்தெறியத்தான் தெரியும்'
என்று!**

திருவாய் திறந்தாலே
தித்திக்கவும்..
தீப்பிடிக்கவும் பேசும்
திராவிடத் திரவியம்
வரலாற்றுக் காவியம்
'வாழ்ந்தநாள் எல்லாம்
போராட்டக் களத்தில்
புகுந்தநாள்' என்றே
செப்புப் பட்டயங்கள்
செய்துவைத்துப் போயிருக்கும்
அந்த
ஒப்பரிய தலைவரை
ஒருகணம் அசைபோட்டால்..

குருதி கொப்பளிக்கும்!
கொள்கை முரசொலிக்கும்!
எங்கே பகையென்று
இதயத்தில் எதிரொலிக்கும்!

வானம் இடியிடிக்கும்!
வானவில் குடைபிடிக்கும்!
ஞானம் துடிதுடிக்கும்!
ஞாயிற்றின் சுடர்வெடிக்கும்!

**மறக்க முடியுமா..அந்த
மாபெரும் தலைவரை!
வானமும் பூமியும்
வாழ்கின்ற நாள்வரை!**

தேனாய்.. தெள்ளமுதாய்
தீம்பழமாய்..தென்னகமாய்
ஞானத் தமிழ்வரமாய்
நாம்பெற்ற புதுநிறமாய்
ஆனவரைப் போற்றி
ஆனவரை புகழ்செய்வோம்!
புதியதோர் உலகத்தை
மறுபடியும் முறைசெய்வோம்!

மழைகொட்டித் தீர்த்தாலும்
மயில்வண்ணம் கரையாது!
மன்னவனே..உன்நினைவு
மனம்விட்டு மறையாது!



**டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.,**
மேனாள் ஒன்றிய
இணையமைச்சர்

---

### பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை மாற்றியமைப்பது தொடர்பாக

# தமிழ்நாடு அரசிடமிருந்து எந்தவித தகவலும் வரவில்லை!

## மக்களவையில் – தயாநிதி மாறன் எம்.பி கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!

சென்னை,ஆக.8-

பரந்தூரில் புதிய விமான நிலையத் திட்டத்தை தொடர்வது, அல்லது திரும்பப்பெறுவது தொடர்பாக தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு ஏதேனும் கடிதம் அனுப்பியுள்ளதா? என்றும் இத்திட்டம் குறித்து தமிழ்நாடு அரசுக்கு காலக் கெடுவை நிர்ணயிக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? என்றும் ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சராபுராம் மோகன் அவர்களிடம் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.



அதன் விவரங்கள் வருமாறு:

2026 மே மாதத்திற்குப் பிறகு, பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள புதிய (Greenfield Airport) விமான நிலையத் திட்டத்தை தொடர்வது, மாற்றியமைப்பது அல்லது திரும்பப்பெறுவது தொடர்பாக தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசுக்கு ஏதேனும் தகவல் அல்லது அதிகாரப்பூர்வ கடிதம் அனுப்பியுள்ளதா? அவ்வாறாயின் அதன் விவரங்கள் என்ன?

மேற்கண்ட திட்டம் தொடர்பாக தமிழ்நாடு அரசின் தற்போதைய கொள்கை நிலைப்பாடு குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் விளக்கம் கோரியிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

இத்திட்டம் தொடர்பாக நீடித்து வரும் நிச்சயமற்ற தன்மை, மேற்கு சென்னை பகுதியில் விமானப் போக்குவரத்து திட்டமிடல், உள்கட்டமைப்பு மேம்பாடு, முதலீடுகள் மற்றும் உள்ளூர் பொருளாதாரம் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதா? ஏற்படுத்தியிருந்தால், அதன் விவரங்கள் என்ன?

இத்திட்டம் குறித்த தனது இறுதி முடிவைத் தெரிவிப்பதற்குத் தமிழ்நாடு அரசுக்கு ஏதேனும் காலக்கெடுவை நிர்ணயிக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறெனில், அதன் விவரங்கள் என்ன?

கொள்கை சார்ந்த நீண்டகால நிச்சயமற்ற தன்மையால் குடியிருப்பாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டமிடல் ஆகியவை பாதிக்கப்படாமல், சென்னையின் எதிர்கால விமான நிலையத் திறன் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்ய எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன?

இதற்கு பதில் அளித்த ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம், பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள புதிய விமான நிலையத் திட்டத்தை மாற்றியமைப்பது அல்லது திரும்பப் பெறுவதுதொடர்பாக தமிழ்நாடு அரசிடமிருந்து எந்தவித தகவலோ, கடிதமோ பெறப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. விஜய் தலைமையிலான த.வெ.க அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளில் பரந்தூரில் முன்மொழியப்பட்டுள்ள புதிய விமான நிலையத் திட்டத்தை அனுமதிக்கமாட்டோம் என்று கூறிய நிலையில், அவ்வாறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது ஆச்சர்யம் அளிக்கிறது!

இவ்வாறு இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### நீட் எதிர்ப்புக் கூட்டியக்கத்தின் சார்பில்

# தொடர் உண்ணாவிரதம் இருந்த ரவி உடல் நலக்குறைவு!

## கழக மாணவர் அணிச் செயலாளர் திருமதி. வீரமணி நலம் விசாரித்தார்!



சென்னை, ஆக. 8-

நீட் எதிர்ப்பு கூட்டியக்கத்தின் சார்பில் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தோழர் ரவி அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட அமைப்பாளர்கள் அருண், சரவணன் ஏற்பாட்டில் கழக மாணவர் அணிச் செயலாளர் வீரமணி சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

மேலும் தங்களின் முழு ஆதரவையும் ஒற்றுமையையும் தெரிவித்ததோடு நீட் எதிர்ப்பு என்பது ஒரு தனிநபரின் போராட்டமல்ல; தமிழ்நாட்டின் சமூகநீதிக்கான மக்களின் உரிமைக் குரல். அந்தக் குரலை ஒலிக்கச் செய்யும் தோழமைகளுக்கும், ஜனநாயக இயக்கங்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருக்கும்.

சமூகநீதிக்கான போராட்டம் தொடரும்!

நீட் எதிர்ப்பு குரல் ஓயாது ஒலிக்கும்! என்றும் கூறினார்.

இந்நிகழ்வின்போது நீட் போராளி மறைந்த அனிதாவின் அண்ணன் மணிரத்னம் உடனிருந்தார்.

---

# நினைவே நீதானே!



**இறந்த பின்னும்
இத்துணை கத்திகள் பாயுமெனில்
எத்துணை பெரியதுன் கொள்கை?**

**உன் சமாதியையும்
கொலைசெய்யும் ஒரு கூட்டமெனில்
எத்துணை வலியதுன் வாழ்வு?**

**உன்மீது அடித்த புயல்
மண்மீது அடித்திருந்தால்
இமயமலை சற்றே
இடம் பெயர்ந்திருக்கும்**

**உன்மீது அடித்த வெயில்
கடல்மீது அடித்திருந்தால்
பாதிச் சமுத்திரம்
பாலையாய்ப் போயிருக்கும்**

**நீயோ
புயலில் சவாரி செய்தாய்
வெயிலைச் சமாதி செய்தாய்**

**உன் உறுதியும் தீவிரமும்
இறுதிவரை வேண்டும்
இளைய தலைமுறைக்கு**

**கலைஞரய்யா!**

**கல்லறைக்கு
மலரேந்தி வந்தேன்**

**கண்ணுறக்கம் கலையுமென்று
காம்புகள் கிள்ளி
இதயத்தில் தூவுகிறேன்
இதழ்களை மட்டும்**



கவிப்பேரரசு
**வைரமுத்து**

---



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கும்பகோணம் வலையப்பேட்டையில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் எம்.பி செ.ராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ரெங்கசாமி, கும்பகோணம் மாநகரக் கழகச் செயலாளர் சு.ப. தமிழழகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, என்.நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன் எஸ்.கே.முத்துச் செல்வம், ஜே.சுதாகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.